# யாழ் மாவட்ட சுற்றலாத்துறைக்கான வாய்ப்புக்களும், சவால்களும்

**U.L. Rizana, M.Vinojand N.Sangeethan**

*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka, Oluvil. Sri Lanka*

**Keywords:** *மரபுச் சுற்றுலா, கலாசாரச் சுற்றுலா, வரலாற்றுச் சுற்றுலா, சுற்றுலா மையங்கள், பொதுமக்கள் பங்களிப்பு, சுற்றுலா முகாமைத்துவம்*

**ஆய்வின் அறிமுகம்**

சுற்றுலாத்துறையானது வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமன்றி வளர்முக நாடுகளிலும் காணப்படும் பொருளாதார வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்கும் ஒரு துறையாகும். இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு கணிசமான அளவு பங்களிப்பை வழங்கக்கூடிய ஒரு துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சியினை சர்வதேச உல்லாசப் பிரயாண அமைப்பு (WTO) பின்வருமாறு விபரிக்கின்றது. “இலங்கை கடந்து கொண்டிருக்கும் தசாப்தத்தில் உலகளாவிய சுற்றுலா கைத்தொழில் தொடர்ச்சியாக வளர்ச்சிகண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் அந்தளவுக்கு இலங்கை உல்லாச வாய்ப்புக்களையும் இயற்கை எழில் மிகு மூலவளங்களையும் கொண்டு மிளிர்கின்றது.” (யாழ்ப்பாணப் புவியியலாளன் : 2000)

யாழ் மாவட்டம் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய பல சுற்றுலாமையங்களைக் கொண்டமைந்த பிரதேசமாகக் காணப்படுகின்றது. இந்துக்கள், இஸ்லாமியர்கள்கள், கிறிஸ்தவர்கள் போன்ற பல்லின சமூகத்தவர்களும் தற்போது ஒற்றுமையாகவும் நல்லிணக்கமாகவும் வாழ்ந்துவருகின்றனர். ஒவ்வொரு சமூகத்தவர்களும் வெவ்வேறான கலாச்சாரங்களையும் பழக்கவழக்கங்களையும் கொண்டுள்ளமை கலாச்சார சுற்றுலாவை மேற்கொள்ளும் சுற்றுலா பயணிகளை கவரும் விடயமாக உள்ளது. மேலும் சூழல் சுற்றுலாவை மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகளை கவரும் இயற்கைக் காட்சிகளும், சுற்றுச்சூழல் அம்சங்களும் காணப்படுகின்றன. அதேபோன்று வரலாற்றுச் சுற்றுலாப் பயணிகளுக்கான வரலாற்றுப் புகழ்மிக்க அமைவிடங்களும் காணப்படுகின்றன. இவ்வாறான சுற்றுலா மையங்களினூடாக சுற்றுலாப்பயணிகள் ஈர்க்கப்பட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரிக்கும் போது அந்நியச் செலாவணி வருமானம் அதிகரிப்பதுடன் அது இப்பிராந்தியத்தின் அபிவிருத்திக்கும் தூண்டுகோலாய் அமைகின்றது. மேலும் இப்பிரதேசத்தில் காணப்படும் வேலையில்லாப் பிரச்சினைக்கும் தீர்வினை தரும் ஒரு துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது.

இவ்வாய்வானது யுத்தத்திலிருந்து மீட்சியடைந்த யாழ் மாவட்டத்தின் சுற்றுலாத்துறையினை முன்னேற்றுவதற்கான வழிவகைகளை இனங்காண்பதனை பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. இவ்விலக்கானது இப்பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலாத் துறைக்கான உள்ளார்ந்த வாய்ப்புக்களை அடையாளம் காணல், இப்பிரதேசத்தில் சுற்றுலாவுக்குத் தடையாகவுள்ள காரணிகளைக் கண்டறிதல், இத்தகைய தடைகளைக் களைவதற்கான தீர்வுகளை முன்வைப்பதன் மூலம் இப்பிரதேசத்தில் சுற்றுலாத் துறையினை முன்னேற்றுவதற்கான உத்திகளை முன்வைத்தல் ஆகிய துணை நோக்கங்களினூடாக அடையப்பட்டுள்ளது.

**ஆய்வுநுட்பமுறைகள்**

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களினைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைகளைப் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதன்னிலைத் தரவுகள் நேரடி அவதானம், வினாக்கொத்து, நேர்காணல், ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளன. இதில் 100 வினாக்கொத்துக்கள் ஆய்வுப் பிரதேச பொதுமக்கள், உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத்துறை பிரயாணிகள் ஆகியோரிடம் கொடுக்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. விடுதி முகாமையாளர்கள், விடுதி ஊழியர்கள், சுற்றுலாத்துறை ஊழியர்கள், சுற்றுலாத்துறை

பிரயாணிகள்,ஆகியோரிடம் நேர்காணல்கள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள், யாழ் மாவட்ட புள்ளிவிபரவியல் திரட்டு போன்ற உத்தியோகபூர்வ ஆவணங்கள், அறிக்கைகள் சஞ்சிகைகள், இணையத்தளங்கள் மற்றும் பத்திரிகைக் கட்டுரைகள் மூலமும் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**சுருக்கமும் முடிவுரையும்**

சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரை யாழ் மாவட்டத்தில் சூழல் சுற்றுலா, கலாச்சாரச் சுற்றுலா, மரபுசார் சுற்றுலா, வரலாற்றுச் சுற்றுலா, கிராமியச் சுற்றுலா, என்பவற்றுக்கான வாய்ப்பக்கள் காணப்படுகின்றன. இவைதவிர நாடளாவியரீதியிலும் வரலாற்றுரீதியாகவும் பிரபல்யம் அடைந்த மாவட்டமாகவும் யாழ் மாவட்டம் காணப்படுகின்றது. இப்பிரபல்யமும் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் எனினும் கடந்த மூன்று தசாப்தகால யுத்தத்தினால் இவ்வாய்ப்புக்கள் இழக்கப்பட்டிருந்தன. யுத்தம் முடிவடைந்த இக்காலப்பகுதியில் சுற்றுலாத்துறையை வளர்சிப்பாதையில் இட்டுச்செல்ல சிறந்த திட்டமிடலின்மை, மூலதனப்பற்றாக்குறை, உட்கட்டமைப்பு விஸ்தீரமின்மை, சிறந்த முகாமை காணப்படாமை, மக்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளாமை, வழிகாட்டி வசதிகளின்மை, சுற்றுலாமையங்களை இனங்கண்டு அவற்றினை அபிவிருத்திசெய்யாமை ஆகியன யாழ் மாவட்ட சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் பிரதான சவால்களாகும்.

யாழ் மாவட்ட சுற்றுலாத்துறையை வளர்சிப்பாதையில் வழிநடாத்திச்செல்வதன் ஊடாக அப்பிரதேச அபிவிருத்திக்கு மட்டும் அன்றி நாட்டின் அபிவிருத்திக்கும் வித்திடும். இதற்காக யாழ் மாவட்ட சுற்றுலாத்துறையில் எதிர்நோக்கப்படும் சவால்களைக் களைவதற்காக சுற்றுலாத்துறை சார்ந்த முதலீட்டாளர்களை ஊக்குவிக்க அரச, தனியார் வங்கிகள் அவர்களுக்குரிய விதத்தில் கடன் வசதிகளை விஸ்தரித்தல், ஒழுங்கமைந்த சுற்றுலா முகாமைத்துவம், நிலைத்திருக்கும் அபிவிருத்தியுடன் கூடிய வகையில் சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்தல், சுற்றலாப்பிரயாணிகளின் வருகையை அதிகரிக்க பொதுமக்களின் பங்களிப்பினைப் பெற்றக்கொள்ளுதல் போன்ற விதந்துரைகளையும் இவ்வாய்வானது உள்ளடக்கியிருக்கின்றது.

யுத்தத்தினால் வடக்குப் பிரதேசமானது சுற்றுலாத் துறையில் பல சவால்களை எதிர்நோக்கியது. இவற்றை இனங்கண்டு சுற்றுலாத் துறையை இப்பிரதேசங்களில் மேம்படுத்துவதற்கு இவ்வாய்வு முக்கியம் பெறுகிறது. மேலும் பொருளாதார மற்றும் சமூகரீதியில் முக்கியத்துவம்பெற்றுக் காணப்படும் சுற்றுலாத்துறையினை முன்னேற்றுவதற்கான தடைகளினை இனங்கண்டு அவற்றினைக் களைவதனூடாக அதனை அபிவிருத்தி செய்வதற்கும் பல வழி முறைகளை எடுத்துரைப்பதற்கு இவ்வாய்வானது ஒரு பெரும் களமாக அமைந்துள்ளது.

## References


Enter for Information Resources Management (2009) *Report ofa Blue print for Development of Jaffna*: CIRM

District Secretariat Jaffna (2007, 2010, 2011): *Jaffna District Statistical Hand Book*: District Planning Secretariat, Jaffna

Echtner, C. M (1999) *Three African success stories:* Tourism development in critical environments: S. Singth and T. V. Singth, New York, Cognizant Communication Corporation.

Fariba Mirzai Kondori (2008), *Impact of Tourism on Economy*, Society, Infrastructure and Environment: *Proceedings of 1st International Symposium on Contemporary Social Issues and Development*, South Eastern University of Sri Lanka

Jagmohan Negi (2004) *International Tourism and Travel*: S.Chand &Co Ltd

Srilanka Tourism Development Authority (2009,2010,2011) *Annual Statistical Report*: SLTDA

பேராசிரியர். குகபாலன்.கா,"இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் துறையின் அன்மைக் காலப் போக்குகள்"*யாழ்பாணப் புவியியளாளன்*,(இதழ் 16-17)

முத்துகிருஸ்னா சர்வானந்தன் (2008) *மோதல் பிராந்தியத்தின் பொருளாதாரம்* : அபிவிருத்திக்கான பருத்தித்துறை ஆய்வகம்

Srilanka tourism development authority (n.d.) *Tourism_planning_and_development* [www] sltd. Available from: http://www.sltda.gov.lk/tourism_planning_and_development [Accessed 01/03/2012]